பக்கங்கள் 18+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஐப்பசி 07 வியாழக்கிழமை 24.10.2024 | அதிர்வு 84


## 16 இந்திய மீனவர்கள் நேற்று இரவு சிக்கினர்

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்து மீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 16 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள் ளனர். 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



### தேர்தல் விதிமுறையை மீறிய குற்றச்சாட்டில்

# கஜேந்திரகுமார், பார்த்தீபன் வடமராட்சியில் இன்று கைது!

(பிரபாகரன் டிலக்சன் எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

தேர்தல் துண்டுப் பிரசுரம் விநியோகம் செய்யப்படும் இடங்களில் வேட்பாளர்கள் சமூகமளிக்க முடியாது என்ற விதிமுறையை மீறியதான குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட வேட்பாளர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், வரதராஜன் பார்த்தீபன் ஆகியோர் வடமராட்சியில் இன்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் பலரும் தீவிர பிரசாரத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இதற்கமைய யாழ். வடமராட்சி, நெல்லியடியில் 02

## லொஹான் ரத்வத்தைக்கு எதிரான வழக்கு ஜனவரி 30இல் விசாரணை



பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதிகள் பத்துப் பேரை அச்சுறுத்தி, முழங்காலிட வைத்து, அவர்கள் தலையில் துப்பாக்கி வைத்து மிரட்டினார் எனத் தெரிவிக்கப்படும் சம்பவம் தொடர்பாக சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றவியல் வழக்கு எதிர்வரும் ஜனவரி 30ஆம் திகதி அநுராதபுரம் நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும். 02




# தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேத்திரனின் செலவு விவரம் காட்சிப்படுத்தப்படவில்லை!

(ந.லோகதயாளன்)

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களின் செலவு விபரங்களில் தமிழ்ப் பொது வேட்பாளர் பாக்கியசெல்வம் அரியநேத்திரனின் செலவு விவரம் காட்சிப்படுத்தப்படவில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட 38 வேட்பாளர்களில் 35 வேட்பாளர்களின் செலவு விவரம் சகல மாவட்ட தேர்தல் அலுவலகங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

காட்சிப்படுத்தல் மேற்கொண்டுள்ள 35 வேட்பாளர்களின் கணக்கு விவரத்தில் சங்குச் சின்னத்தில் போட்டியிட்ட பா.அரியநேத்திரனின் கணக்கு அறிக்கை எங்குமே காட்சிப்படுத்தப்படவில்லை.



இதுதொடர்பில் தேர்தல்கள் அலுவலகத்தினரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது,

"அரியநேத்திரன் உரிய காலப் பகுதயில் தனது கணக்கு அறிக்கையை உரிய முறையில் கையளிக்கவில்லை என்ற குற்றச்சாட்டுக்கு உட்பட்டு சட்ட நடவடிக்கை தொடர்பில் ஆராயப்படுவதால் அவரது அறிக்கை காட்சிப்படுத்தப்படவில்லை."

- என்று பதிலளித்தனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**16 இந்திய மீனவர்கள்...**

யாழ். நெடுந்தீவுக்கு அருகே நேற்று இரவு இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டபோது அப்பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்ட இலங்கைக் கடற்படையினர் 2 படகுகளையும், அதிலிருந்த 16 மீனவர்களையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களை மயிலிட்டிக்கு அழைத்து வந்து விசாரணைகளுக்குப் பின்னர் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**கஜேந்திரகுமார்...**

இன்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர், கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் தேர்தல் துண்டுப் பிரசுர விநியோகத்தில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ். தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கைது செய்யப்பட்டார்.

இதேபோன்று தமிழ் மக்கள் கூட்டணியின் யாழ். தேர்தல் மாவட்ட வேட்பாளர் வரதராஜன் பார்த்தீபன் யாழ். வடமராட்சி, பருத்தித்துறையில் தேர்தல் துண்டுப் பிரசுர விநியோகத்தில் ஈடுபட்டிருந்தபோது பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

**பிந்திய செய்தி**

நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ். தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இன்று மாலை பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

**லொஹான்...**

இன்று வியாழக்கிழமை அநுராதபுரம் நீதிவான் நீதிமன்றத்தில் இந்த வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது விசாரணைக்கான திகதி நிர்ணயிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்டோர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சிரேஷ்ட சட்டத்தரணி கேசவன் சயந்தன் மற்றும் சட்டத்தரணி வெனிசலலஸ் துஷான் ஆகியோர் இன்று மன்றில் முன்னிலையாகினர்.

வழக்குத் தொடர்பான வாக்குமூலங்கள் மற்றும் ஆவணங்கள் எதிரித் தரப்புக்கு ஒப்படைக்கப்பட்டு விட்டன எனத் தெரிவிக்கப்பட்டமையை அடுத்து நீதிவான் வழக்குக்கான திகதியை நிர்ணயம் செய்தார்.

இதே விடயத்தை ஒட்டி உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதுவும் இப்போது விசாரணைக்கான கட்டத்தை நெருங்கி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜனவரி 30 ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படும்போது இந்த வழக்கில் எதிரியினால் துப்பாக்கி வைத்து அச்சுறுத்தப்பட்டவர் எனக் கூறப்படும் பூபாலசிங்கம் சூரியபாலன் மற்றும் ஏழாவது சாட்சியமான அவரின் விடயங்களை சிங்களத்தில் மொழி பெயர்த்தவரான மதியரசன் சுலக்ஷன் ஆகிய இருவரையும் சாட்சியம் அளிப்பதற்காக நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அரச தரப்பின் பரிந்துரைக்கமைய நீதிவான் உத்தரவிட்டார்.

2021ஆம் ஆண்டு செப்டெம்பர் 12ஆம் திகதி லொஹான் ரத்வத்தையால் மிரட்டப்பட்டவர்கள் என்று கூறப்படும் 10 தமிழ் கைதிகளும் இப்போது விடுவிக்கப்பட்டு விட்டனர் அல்லது பிணையில் விடப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.




# அமெரிக்கத் தூதர் ஜுலீ சங்
# யாழ். பல்கலைக்கு விஜயம்

**(எஸ்.நிதர்ஷன்)**

இலங்கைக்கான ஐக்கிய அமெரிக்கத் தூதுவர் ஜ/லீ சங் மற்றும் தூதரக அதிகாரிகள் இன்று வியாழக்கிழமை காலை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டனர்.

ஐக்கிய அமெரிக்கத் தூதரகத்தால் யூ.எஸ். எயிட் நிதியுதவியுடன் யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீடத்தின் மெய்யியல் துறையால் முன்னெடுக்கப்பட்டு வரும் சமூக ஒத்திசைவு மற்றும் நல்லிணக்க செயற்றிட்டத்தின் கீழ் நடத்தப்படும் “அகம்” உளவளத்துணை நிலையத்துக்கே அமெரிக்கத் தூதுவர் தலைமையிலான குழுவினர் விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

இந்த விஜயத்தின்போது, அமெரிக்கத் தூதுவர் ஜுலீ சங் உடன்,யூ.எஸ். எயிட் இன் சமூக ஒத்திசைவு மற்றும் நல்லிணக்கச் செயற்றிட்டத்தின் தலைமை அதிகாரி ஜெயதேவன் கார்த்திகேயன் மற்றும் தூதரக அதிகாரிகளும், யாழ். பல்கலைக்கழகத்தின் சார்பில் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம் மற்றும் உயப் பட்டப்படிப்புக்கள் பீடத்தின் பீடாதிபதி சிரேஷ்ட பேராசிரியர் தி. வேல்நம்பி ஆகியோருடன் மெய்யியல் துறைத் தலைவர் திருமதி அபிராமி ராஜ்குமார், சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கே.கஜவிந்தன், உளவள ஆலோசகர் திருமதி ஆர்.சாவித்திரிதேவி உட்படப் பல்கலைக்கழக அதிகாரிகள் மற்றும் உளவியல், மெய்யியல் துறைகளின் மாணவர்களும் கலந்துகொண்டனர்.

அமெரிக்கத் தூதுவர் ஜுலீ சங் “அகம்” உளவளத்துணை நிலையத்தின் செயற்பாடுகளைப் பார்வையிட்டதோடு மாணவர்களுடன் அளவளாவி நிலைமைகளைக் கேட்டறிந்தார். அதன் பின்னர் துணைவேந்தர் மற்றும் பீடாதிபதிகளுடன் கலந்துரையாடிய அமெரிக்கத் தூதுவர் தற்கால நிலைமைகள் குறித்து கேட்டறிந்து கொண்டார்.




















# ஊர்காவற்றுறையில் கூரிய ஆயுதங்கள் மீட்பு!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறைப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கூரிய ஆயுதங்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

ஐந்து வாள்கள் உள்ளிட்ட ஏழு கூரிய ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதுடன் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்பட்டவில்லை.

ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய இன்று காலை நடத்தப்பட்ட சோதனையின் போது வீடொன்றில் இருந்து இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

வன்முறையில் ஈடுபடுவதற்குத் தயாராக குறித்த ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

வீட்டில் வசித்த சந்தேகநபர் தலைமறைவான நிலையில் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுள்ள பொலிஸார், மேற்படி நபரைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர்.



# ஆங்கில தினப் போட்டியில் வெற்றி பெற்ற தென்மராட்சி மாணவர்களுக்கு கௌரவிப்பு

வடக்கு மாகாண மட்ட ஆங்கில தினப் போட்டியில் வெற்றி பெற்ற தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கான கௌரவிப்பு இன்று வியாழக் கிழமை தென்மராட்சி கல்வி வலயத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் கலந்துகொண்டார்.

தென்மராட்சி கல்வி வலயத்தின் கல்விப் பணிப்பாளர் கிறிஸ்தோபர் கமலராஜன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வெற்றி பெற்ற மாணவர்களின் பெற்றோர்கள், தென்மராட்சி கல்வி வலயத்தின் கல்வி சார்ந்த அதிகாரிகள்,



உத்தியோகத்தர்கள் எனப் பெருந்திரளானோர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய ஆளுநர், "மாணவர்களின் எதிர்காலத்தை வளமாக்குவதற்கு கற்றல் செயற்பாடுகள் முன்னிலை வகிக்கின்றன. மாணவர்கள் மென்மேலும் பல சாதனைகளை புரிந்து எதிர்காலத்தில் சிறந்த பிரஜைகளாக திகழ வேண்டும்." – என்று வாழ்த்தினார்.

தென்மராட்சி கல்வி வலயத்தில் இருந்து மாகாண மட்ட ஆங்கில தினப் போட்டியில் வெற்றி பெற்ற 15 மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன் தேசிய மட்டத்தில் இடம்பெறும் ஆங்கில தினப் போட்டியில் வெற்றி பெறுவதற்கு ஆளுநர் வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.



# மன்னாரில் கடும் மழையால் வெள்ளத்தில்மூழ்கிய கிராமங்கள்

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் மாவட்டத்தில் நேற்று (23) புதன்கிழமை இரவு முதல் இன்று வியாழக்கிழமை (24) காலை வரை பெய்த தொடர் மழை காரணமாக மாவட்டத்தின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சாந்திபுரம், சௌதார், எழுத்தூர், மூர்வீதி உள்ளடங்கலாக பல கிராமங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. எழுத்தூர் பகுதியில் உள்ள 30 குடும்பங்களின் வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்ததன் காரணமாக முப்பது குடும்பங்களும் தற்போது எழுத்தூர் பாடசாலையில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

மாவட்டத்தின் பல பாகங்களிலும் தேங்கியுள்ள வெள்ள நீரை வெளியேற்ற மக்கள் கிராம நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

மன்னார் பிரதேசச் செயலாளர் எம். பிரதீப் தலைமையிலான குழுவினர் குறித்த பகுதிக்குச் சென்று துரித நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் அனர்த்தம் சம்பந்தமாக உடனடியாக மாவட்ட செயலக அனர்த்த முகாமைத்துவ பிரிவு, பிரதேச செயலகம் அல்லது கிராம அலுவலகர்களின் கவனத்துக்குக் கொண்டு வருமாறு மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மக்களின் போக்கு

இலங்கை வாக்காளர்கள் - குறிப்பாகத் தென்னிலங்கை வாக்காளர்கள் - மிகவும் வித்தியாசமானவர்கள். ஒரு வகையில் பார்த்தால் வினோதமானவர்களும் கூட.

அடிக்கடி கூட்டமாக - குழுமமாக - ஒன்று சேர்ந்து மாறி மாறி வாக்களிக்கும் பண்பியல்பை வெளிப்படுத்துபவர்கள்.

2010 இல் ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் அப்போது யுத்தத்தை வெற்றி கொண்ட வீரராக கருதப்பட்ட மஹிந்த ராஜபக்ஷ தரப்பினருக்குக் கேட்டு கேள்வியின்றி வாக்குகளை அள்ளிக் கொட்டி மித மிஞ்சிய பெரும்பான்மையைக் கொடுத்தார்கள்.

ஐந்து ஆண்டுகள் கழிந்ததும் நிலைமையைத் தலைகீழாக்கினார்கள். மஹிந்தவையும் அவரை சார்ந்தவர்களையும் தூக்கி எறிந்து, மைத்திரியையும் ரணிலையும் ஆட்சிப் பீடத்துக்குக் கொண்டு வந்தார்கள்.

2019 இலும், 2020 இலும் மீண்டும் ராஜபக்ஷக்களுக்கு வாக்குகளை அள்ளிச் சொரிந்தார்கள். முன்பின் இல்லாதவாறு 69 லட்சம் வாக்குகளை கோட்டாபய ராஜபக்ஷ சுவீகரித்தார். நாடாளுமன்றத்திலும் வழமைக்கு மாறாக மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை என்ற பெருவெற்றியை வாரிக் கொடுத்தார்கள்.

அவர்களே பின்னர் அதே கோட்டாபய ராஜபக்ஷவை நிறைவேற்றதிகார ஜனாதிபதி பதவியில் இருந்து ஓட ஓட விரட்டினார்கள். மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையோடு வந்த அரசு நாடாளுமன்றத்தில் மிகுந்த நெருக்கடியை எதிர்கொள்ளும் சூழ்நிலையை அதே வாக்காளப் பெருமக்களே உருவாக்கினார்கள்.

இப்போது அந்தத் தரப்புகளை எல்லாம் துரத்தி விட்டு தேசிய மக்கள் சக்தியின் அநுர குமார திஸநாயக்கவுக்கு ஜனாதிபதி பதவியில் வாய்ப் பளித்திருக்கிறார்கள். அதேபோல நாடாளுமன்றத் தேர்தலிலும் முன்னைய சந்தர்ப்பங்கள் மாதிரி அதே தேசிய மக்கள் சக்தி பக்கம் தென்னிலகை மக்கள் பெருவாரியாகச் சாயக் கூடிய நிலைமை தென்படுகின்றது.

ஆனால், அதன் அர்த்தம் மக்கள் முழுமையாக அந்தத் தரப்பில் தங்கி விட்டார்கள் என்பது அல்ல. வாக்குச்சீட்டு மூலம் தங்கள் கருத்து நிலையை வெளிப்படுத்தும் அவர்கள், அடுத்த வாய்ப்புக் கிடைக்கும் போது தங்கள் முன்னைய நிலைப்பாட்டினின்றும் தலைகீழாக மாறக் கூடியவர்கள் என்பதை ஏற்கனவே பல சந்தர்ப்பங்களில் நிரூபித்து வந்திருக்கிறார்கள்.


தங்கள் ஆட்சிக்கு வலுவான நாடாளுமன்றப் பலத்தைக் கோரும் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தங்கள் ஆட்சி பீடத்துக்கு எதிர்க்கட்சிகள் தேவையில்லை என்ற தொனியில் பேசி வருகிறார்.

ஆனால் இந்த விடயத்தில் இலங்கை வாக்காளப் பெருமக்களின் கருத்து நிலைப்பாடு நிலையானது அல்ல. எப்போதும் ஒரு பக்கச் சார்பானதும் அல்ல என்பதை ஜனாதிபதியும் அவரது தரப்பினரும் புரிந்து கொள்ள வேண்டும்.

கிடைக்கும் சந்தர்ப்பத்தைத் துஷ்பிரயோகம் செய்யாமல், நல்லாட்சி புரியத் தவறினால் அடுத்த சந்தர்ப்பத்தில் மக்கள் அவர்களைத் தூக்கி எறியப் பின்னிற்க மாட்டார்கள் என்பதுதான் இலங்கையின் கடந்த காலச் சரித்திரம்.

கடந்த காலச் சரித்திரங்களில் இருந்து சரியான பாடங்களைக் கற்றுக் கொள்ளாத அரசியல்வாதிகள், அரசியல் தலைவர்கள் வெற்றிகரமானவர்களாக அமைவதில்லை.

இப்போது முதல் தடவையாக அதிகாரத்துக்கு வந்திருக்கும் தேசிய மக்கள் சக்தி இதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும். மக்கள் அதிகாரத்தைத் திரண்டு அளித்து விட்டார்கள் என்ற மமதையில் தவறான பாதையில் வழி நடக்க முற்பட்டால் அரசை தூக்கி எறிய மக்களுக்கு காலம் செல்லாது.


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA




# மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு நடைபவனி இன்று யாழ். நகரில்!

(எஸ். நிதர்ஷன்)

மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு நடைபவனி ஒன்று யாழ் நகரில் இன்று (24) வியாழக்கிழமை காலை முன்னெடுக்கப்பட்டது.

சுகாதார அமைச்சின் தேசிய புற்றுநோய் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் யாழ். பிராந்திய சேவைகள் பணிமனையின் தொற்றா நோயியல் பிரிவின் ஏற்பாட்டில் இந்த விழிப்புணர்வு நடைபவனி இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் பொது நூலகம் முன்பாக ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பேரணியானது யாழ். நகர் ஊடாக யாழ்ப்பாண பிரதேச செயலகதில் நிறைவடைந்தது.



யாழ். மாநகர பிரதம சுகாதார வைத்திய அதிகாரி த.தவரூபன் தலைமையில் இடம்பெற்ற இந்தப் பேரணியில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், தொற்றா நோயியல் மருத்துவர் எஸ்.குகதாசன், புற்றுநோயியல் வைத்திய நிபுணர் இ.கவிதா, யாழ். மாநகர ஆணையாளர் ச.கிருஸ் னேந்திரன், யாழ். மாநகர பிரதம பொதுச் சுகாராரப் பரிசோதகர் கு.பத்ம குமார், ஏனைய சுகாதார வைத்திய அதிகாரிகளான க.கௌசல்யா, பெ.நிபுணி சுலக்சனா, யாழ்ப்பாண பிரதேச செயலர் சா.சுதர்ஷன், லயன்ஸ் கழகத்தினர், லியோ கழகத்தினர், யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீட மாணவர்கள் மற்றும் பொது அமைப்பினர் கலந்து கொண்டனர்.




















# சாய்ந்தமருது நூலகத்தில் வாசிப்பு மாத விசேட நிகழ்வு

(அஸ்லம் எஸ்.மௌலானா)

2024 ஒக்ரோபர் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாய்ந்தமருது பொது நூலகம் விசேட நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

“உலகை வென்றவர்கள் வாசித்த மக்களே” என்ற தொனிப்பொருளின் நூலகர் ஏ.எச். தௌபீக் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் கல்முனை மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வுக்குச் சாய்ந்தமருது ஜி.எம்.எம்.எஸ். பாடசாலை மாணவர்கள் விசேடமாக அழைக்கப்பட்டு அவர்களுக்கு நூலக சேவை அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. வாசிப்பை ஊக்கு விக்கும் வகையிலான நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.



நிகழ்வில் பங்கேற்ற மாணவர்கள் அனைவருக்கும் பரிசுகள் வழங்கி வைக்கப்பட்டன. இந்த மாணவர்களை நூலகத்தில் இலவசமாக சேர்த்துக் கொள்வதற்கான அங்கத்துவம் விண்ணப்பப் படிவங்களும் கையளிக்கப்பட்டன.

இதில் பாடசாலை சார்பில் பொறுப்பாசிரியர்கள் உட்பட நூலக உதவியாளர்களும் கலந்துகொண்டனர்.







# தமிழ் மக்களுக்காக வேலை செய்வதால் உண்மையில் நானே தமிழ்த்தேசியவாதி!

## தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் அங்கஜன் இராமநாதன்

தமிழ் தேசிய அரசியல் செய்பவர்கள் தமிழ் மக்களை அழித்துத்தான் தமிழ் தேசியத்தைப் பெற்று தருவோம் என்று சொல்லிக் கொள்வதில் எனக்கு உடன்பாடு இல்லை. நான் நம்புகிறேன், தமிழ் மக்கள் இங்கு வழ்ந்தால்தான் தமிழ் தேசியம் இருக்கும். பிரான்சிலோ கனடாவிலோ தமிழ் தேசியம் பற்றிப் பேசமுடியாது. அங்கு உருவாக்கவும் முடியாது.

அந்த வகையில் தமிழ் மக்கள் வழ்ந்தால்தான் தமிழ் தேசியம் இருக்கும் என்ற அடிப்படையில், நான்தான் மிகப் பெரிய தமிழ்த்தேசியவாதி. ஏன் என்றால் நான் தமிழ் மக்கள் வாழும் வேலைத் திட்டத்தை முன்னெடுத்து வருகிறேன். எமது மக்களது அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டால்தான் அவர்கள் இங்கு வசதியாக வாழ முடியும்.

இவ்வாறு எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் சுயேட்சையாகத் தபால்பெட்டி சின்னத்தில் இலக்கம் ஒன்றில் போட்டியிடும் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், நல்லூர், செல்லர் வீதியில் அமைந்துள்ள பூதவராயர் சிவன் ஆலயத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு உரையாற்றும்போது தெரிவித்ததாவது,

இன்று தேசிய அரசியலில் பெரிய மாற்றம் ஒன்று ஏற்பட்டுள்ளது. அநுர குமார திஸநாயக்க. அவர் ஊழல் அற்ற அரசை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். அந்த அடிப்படையில் நாம் ஊழல்வாதிகள் இல்லை என்பதும் அவருக்குத் தெரியும்.

நான் நல்லாட்சிக் காலத்தில் ஐந்து மாதங்கள் மட்டுமே அமைச்சராக இருந்துள்ளேன். அந்தக் காலப் பகுதியில் 600 மில்லியன் ரூபா நான் மக்களுக்காகக் கொண்டு வந்துள்ளேன். அந்த அடிப்படையில் நான் தனியாக வெற்றியடையும் பட்சத்தில் அரசுடன் இணைந்து பணியாற்ற வாய்ப்புகள் உள்ளன.

அந்த அடிப்படையில் மக்கள் விடுத்த கோரிக்கை, தனியாகத் தனிக் கட்சிகளில் இருந்து வாங்கோ என்பதுதான். அவ்வாறாயின் வரவேற்பைத் தருவோம் என்றும் மக்கள் தெரிவித்துள்ளனர்.



நான் அரசில் அபிவிருத்திக் குழுத் தலைவராக ஒன்றரை வருடங்கள் இருந்துள்ளேன். அந்தக் காலத்தில் நான 45 ஆயிரம் லட்சம் ரூபா நிதியை நான் யாழ் மாவட்டத்துக்குக் கொண்டு வந்துள்ளேன். இந்த நிதியில் வீதிகள், வீட்டுத் திட்டங்கள், ஆலயங்கள், மலசலகூடங்கள் போன்ற திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கான ஆதாரங்களை நான் உங்களுக்குத் தருவேன்.

நான் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்குத் தடை என்னவென்றால் பொருளாதார நெருக்கடி. அரசிடம் நிதி இல்லை. இந்த நிலையில் எமது சமூகக் கட்டமைப்பை உருவாக்கி வந்தது எமது கல்வி அத்தியாயம். இது தற்போது சரிவைக் கண்டள்ளது. இளைஞர்கள் வேலை வாய்ப்புகள் இல்லை என்று தெரிவிக்கின்றனர். அது ஏன். வேலைச் சந்தையில் தேவைப்படும் கல்வி நிலைமை எம்மிடம் இல்லை. இந்த நிலைமை மாற வேண்டும். நாங்கள் படிக்கும் சாதாரண படிப்புக்கு சர்வதேசத்தில் இடம் இல்லை. இதற்குத் தொழில்நுட்பக் கல்விதான் கைகொடுக்கும். அதற்கு ஏற்ற வகையில் யாழ்ப்பாணத்தில் 9 தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களை நிறுவியுள்ளேன். குறிப்பிட்ட காலத்தில் மாற்றம் கிடைக்கும். 10 வருடங்களில் வெளிநாடுகளுக்குச் செல்லாது இங்கிருந்து வருமானம் ஈட்டக் கூடிய நிலைமை ஏற்படும்.

நாங்கள் இத்தனை வருடங்கள் இவ்வளவு போராடி இவ்வளவை இழந்து எங்களை இழந்து திறமைகளை இழந்து தலைமுறைகளை இழந்து அவர்களின் எதிர் காலத்தை கடைசியில் ஒன்றும் இல்லாமல் போவது என்றால் ஏன் இந்த இழப்புகள்.

தமிழ் தேசிய அரசியல் செய்பவர்கள் தமிழ் மக்களை அழித்துத் தான் தமிழ் தேசியத்தைப் பெற்று தருவோம் என்று சொல்லிக் கொள்வதில் எனக்கு உடன்பாடு இல்லை. நான் நம்புறன் தமிழ் மக்கள் இங்கு வழ்ந்தால் தான் தமிழ் தேசியம் இருக்கும். பிரான்சிலோ கனடாவிலோ தமிழ் தேசியம் பற்றிப் பேச முடியாது. அங்கு உருவாக்கவும் முடியாது.

அந்த வகையில் தமிழ் மக்கள் வாழ்ந்தால்தான் தமிழ் தேசியம் இருக்கும் என்ற அடிப்படையில், நான் தான் மிகப் பெரிய தமிழ்த்தேசியவாதி. ஏன் என்றால் நான் தமிழ் மக்கள் வாழும் வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருகிறேன். எமது மக்களது அடிப்படைத் தேவைகள் பூர்த்திசெய்யப்பட்டால்தான் அவர்கள் இங்கு வசதியாக வாழ முடியும்.

என் கனவு யாழ். மூலம் எமது மக்கள் வாழ உகந்த மாவட்டமாக இதனை மாற்ற வேண்டும் என்ற அவாவில் தொழில் நுட்பக் கல்லூரிகளை நிறுவியுள்ளேன்.

நான் எனக்குக் கிடைத்த வாய்ப்புகளை விட்டு வந்து மக்களுக்காகச் செயற்பட்டு வருகிறேன். எனக்குக் காசு சேர்க்க வேண்டிய தேவையில்லை. எனக்கு மக்களது வாழ்வில் வரும் மாற்றத்தைப் பார்க்கும் போது வரும் சந்தோசமே தேவை. காசு சேர்க்கும் சந்தோசத்தை விட இதுவே மிகப் பெரியது. இதற்காகவே நான் இந்தக் கடினமான பாதையைத் தேர்ந்தெடுத்துள்ளேன்.

எமது இருப்பை நாம் தக்கவைக்க வேண்டும். அதற்கு வேலை செய்யக் கூடிய நாடாளுமனற உறுப்பினர்களைத் தெரிவுசெய்ய வேண்டும். கடந்த 5 வருடங்கள் என்ன செய்தார்கள் என்பதன் அடிப்படையில் அவற்றை வைத்துக் கொண்டு அடுத்த 5 வருடங்கள் என்ன செய்வார்கள் என்ற அடிப்படையில் வக்களிக் வேண்டும்.

நான் உங்களிடம் கேட்டுக் கொள்வது என்னவென்றால், நான் உங்கள் பிரதேச பிரதிநிதியாக இருந்து அடுத்த 5 வருடங்கள் மக்களுடைய தேவைகளைப் பூர்த்திசெய்வேன். அதற்கு மக்களாகிய நீங்கள் வாய்ப்புத் தரும் பட்சத்தில் நான் உண்மையாக இருந்து கடந்த 5 வருடங்களில் செய்ததில் பல மடங்குகள் செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும்.- என்றார்.

# எம்மிடம் அதிகாரம் கையளிக்கப்படும் போது வினைத்திறனான சேவையாற்ற முடியும்

## மட்டக்களப்பு வேட்பாளர் தியாகராஜா சரவணபவன்

(பழுவூரான்)

நாங்கள் தமிழரசுக்கட்சி தலைமையிலான தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மூலம் 5 ஆண்டு காலம் மிகத் திறமையாக மாநகர மக்களுக்காகப் பணிபுரிந்துள்ளோம். எம்மிடம் அதிகாரம் கையளிக்கப்படும் போது மக்களுக்கு வினைத்திறனான சேவையாற்ற முடியும்.

இவ்வாறு மட்டக்களப்பு மாநகர முன்னாள் முதல்வரும் தமிழரசுக் கட்சி வேட்பாளருமான தியாகராஜா சரவணபவன் தெரிவித்தார்.

எதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் தமக்கான ஆதரவை மக்கள் வழங்க வேண்டுமெனக் கோரி நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்தக் காலப் பகுதியில் மட்டக்களப்பு மாநகர மக்களுக்கு வினைத்திறனும், விளைதிறனுமான சேவைகளை வழங்கியிருந்தோம்.


இதன்போது 500 இற்கும் அதிகமான வீதிகள் புனரமைக்கப்பட்டிருக்கின்றன. அத்தோடு தேவையான வடிகான்களும் தூர்வாரப்பட்டுள்ளன.

உலகில் அதாவது தெற்காசியாவில் அதிலும் குறிப்பாக இலங்கையின் மட்டக்களப்பு மாநகரில் சிறுவர் சினேகபூர்வ நகர அபிவிருத்திச் செயற்பாட்டை நடைமுறைப்படுத்தி, அதில் நாம் வெற்றியடைந்திருந்தோம்.

இதன் மூலமாக எமது செயற்பாடுகள் உலகளாவிய ரீதியில் விரிவுபடுத்தப்பட்டன. இதன்போது சிறப்பாகச் செயற்பட்ட 5 மாநகர முதல்வர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அதில் ஒருவராக நானும் தெரிவு செய்யப்பட்டிருந்தேன்.

இவ்வாறு நான் தெரிவு செய்யப்பட்டமையானது மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கு மட்டுமன்றி, இலங்கை முழுவதற்கும் பெரும் புகழை ஈட்டிக் கொடுத்திருந்தது.

அதுமட்டுமல்லாமல் மட்டக்களப்பு



மாநகர சபையில் எமது ஆட்சிக் காலத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை நாம் நடைமுறைப்படுத்தியிருந்தோம். குறிப்பாக அரசாங்க நிதியை அல்லது மாநகர மக்களின் வரிப்பணத்தை மட்டும் நம்பியிருக்காமல் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு அமைப்புக்களோடு நாம் சேர்ந்து செயற்பட்டு பல்வேறு செயற்றிட்டங்களை முழுமை பெறச் செய்துள்ளோம்.

இதன்போது எம்மோடு யுனிசெப், யு.என்.டி.பி மற்றும் ஏசியா பவுண்டேசன் போன்ற நிறுவனங்கள் தொடர்ந்து 5 வருடங்கள் பணியாற்றியிருந்தன. இதன் மூலம் எம்மால் மக்களுக்கான பல்வேறு செயற்றிட்டங்கள் முழுமைபடுத்தப்பட்டிருந்தன.

இவ்வாறான நிலையில் நகரில் வெள்ளம் ஏற்படும் காலங்களில் மட்டக்களப்பு மாநகரசபை ஊடாக வெள்ளம் வழிந்தோடுவதற்கான செயற்றிட்டங்களை உடனுக்குடன் களத்தில் நின்று அமுல்படுத்தியிருந்தோம்.

இவ்வாறான நிலையில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட கொவிட் - 19 தொற்று காலத்தில் மட்டக்களப்பு மாநகருக்குள் எந்தவிதமான பிரச்சினைகளும் வராமல் நாங்கள் தொடர்ச்சியாகக் களத்தில்நின்றுசேவையாற்றியுள்ளமை கண்கூடு.

அதேபோன்று ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் பின்னர் உடனடியாகக் களத்தில் நின்று எமது மக்கள் பாதிக்கப்படாத வகையில் பல்வேறு செயற்பாடுகளை மக்கள் நலன் சார்ந்து மேற்கொண்டிருந்தோம். அதுமட்டுமன்றி இனமுரண்பாடுகள் ஏற்படாமலும் எமது மக்களைப் பாதுகாத்திருந்தோம்.

இதன் மூலமாக மட்டக்களப்பு மாநகருக்குள் எந்தவிதமான பிரச்சினைகளும் ஏற்படாத வண்ணம் நாங்கள் தொடர்ச்சியாக நின்று மக்களுக்குப் பணியாற்றியிருந்தோம்.

இவ்வாறான செயற்பாடுகள் அனைத்துக்கும் எமது வட்டாரத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களது ஆதரவு எமக்குக் கணிசமான அளவு கிடைத்திருந்தது.

மட்டக்களப்பு மாநகரின் எல்லைக் கிராமத்திலுள்ள வடிகான்கள் அடைக்கப்பட்டிருந்தது. நாம் அவற்றை முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் ரோகித போகொல்லாகமவின் உதவியோடு அனைத்து வடிகான்களும் தூர்வாரப்பட்டு,வெள்ளம் வழிந்தோடக் கூடிய வகையில் எமது செயற்பாடுகளைச் செய்திருந்தோம்.

இந்த நிலையில் மட்டக்களப்பு மாநகர எல்லைக்குள் எனக்குக் கிடைத்த அதிகாரத்தை மாவட்டத்துக்கு விரிவுபடுத்த வேண்டும் என்பதற்காகத்தான் நான் இம்முறை நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் போட்டியிடுகின்றேன்.

நான் இதில் வெற்றிவாகை சூடுமிடத்து எமது வளங்களான விவசாயம், மீன்பிடிக் கைத்தொழில் மற்றும் கால்நடை வளர்ப்பு உள்ளிட்ட பல்வேறு பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் வகையில் செயற்றிட்டங்கள் வகுக்கப்படும்.

அதேபோன்று கொடூர யுத்தத்தால் கணவனை இழந்துள்ள விதவைகளுக்காகப் பல்வேறு பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகள் எம்மால் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

தற்சார்புப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் வகையிலான திட்டங்களை முன்மொழிந்து, அதன் மூலமாக வறுமை ஒழிப்புத் திட்டங்களை நாம் அமுல்படுத்தலாம்.

இவ்வாறான செயற்பாடுகளை எமக்கான அதிகாரங்கள் கிடைக்கும்போது பூரணமாகச் செயற்படுத்த உறுதி பூண்டுள்ளோம்.- என்றார்.



# எமது பிரதிநிதித்துவத்தை இழந்து அடையும் மாற்றம் ஆபத்தானது!

## ஐக்கிய தேசிய கட்சியின் வேட்பாளர் ராமேஷ்வரன் தெரிவிப்பு

(க.கிஷாந்தன்)



மாற்றமென்பது மக்களுக்கு நன்மை பயக்கக் கூடியதாக இருக்க வேண்டும். தமிழ்ப் பிரதிநிதித்துவம் என்பது மிக முக்கியம். எனவே, எமது பிரதிநிதித்து வத்தை இழந்து அடைய நினைக்கும் மாற்றம் ஆபத்தானமாகவே இருக்கும்.

இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தவிசாளரும், நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான மருதபாண்டி ராமேஸ்வரன் தெரிவித்தார்.

மஸ்கெலியா, அப்கொட் உள்ளிட்ட பகுதிகளில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறி யவை வருமாறு,

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் அனைவருக்கும் சம்பள உயர்வு கிடைக்கப்பெற்றது. நாம் காங்கிரஸ ின் அங்கத்தவர்களுக்கு மட்டுமா சம்பள உயர்வை பெற்றுக்கொடுத்தோம்? இல்லை. அனைத்து தொழிலாளர் களுக்கும் பெற்றுக்கொடுத்தோம்.

எமது பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமானும், நானும் அரசில் அங் கம் வகித்ததால் இம்முறை பெரும் போராட்டங்கள் இன்றி, சம்பளத்தை பெறக்கூடியதாக இருந்தது.

காணி உரிமையை பெற்றுக் கொடுப்பதற்கு உரிய ஏற்பாடுகளை செய்திருந்தோம். அதற்குரிய நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. பெருந்தோட்டப் பகுதிகளில் கல்வி மேம்பாட்டுக்கும் முக்கியத்துவம் வழங்கியுள்ளோம்.

சில வேட்பாளர்கள் மக்களுக்கு எதையும் செய்யாததால் தோட்டப்பகுதிக ளுக்கு வருவதற்கு அஞ்சுகின்றனர். நாம் சேவை செய்துள்ளதால் உரிமை யுடன் மக்களிடம் வாக்கு கேட்டு வரு கின்றோம். ஆனால் காங்கிரஸ் எதையும் செய்யவில்லை என சிலர் போலி பிரச்சாரம் முன்னெடுத்துவருகின் றனர். இவ்வாறு குறைகூறுபவர்கள் மக்களுக்கு என்ன செய்துள்ளனர்? ஒன்றும் செய்யவில்லை. மாறாக காங்கி ரஸை விமர்சித்து அரசியல் செய்யலாம் என நினைக்கின்றனர்.

தமிழ்ப் பிரதிநிதித்துவமென்பது மிக முக்கியம். அதற்கா சில விட்டுக்கொடுப்பு களைக் கூட செய்தோம். அனைத்து தமிழ்க் கட்சிகளுடனும் பேச்சு நடத்தி னோம். ஆனால் மாற்று தரப்புகள் அதற்கு உரிய பதிலை வழங்கவில்லை. மாற்றம் என்பது நமது மக்களுக்கான மாற்றமாக இருக்க வேண்டும். மாறாக நமது பிரதிநிதித்துவத்தை இழந்து மாற்றத்தை தேடினால் அது ஆபத் தில்தான் முடியும். – என்றார்.

# நெருக்கடியான காலகட்டத்தில் தமிழர் தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டும்!

## மட்டு. மாவட்ட வேட்பாளர் வைத்தியர் சிறிநாத் தெரிவிப்பு!

(பழுவூரான்)

நாம் தற்போது ஒரு நெருக்கடியான காலகட்டத்தில் நிற்கின்றோம். ஏன் தமிழரசு கட்சிக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும்? என்று நாம் சிந்திக்க வேண்டும்.

நாம் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்துக்குத் தெரிவு செய்யப்படும் போது வெளிநாட்டில் உள்ள உறவுகள் இங் குள்ள மக்களுக்கு வேண்டிய அபிவிருத்தித் திட்டங்களை ஊழலற்ற முறையில் முன்னெடுக்கத் தயாராகவே இருக்கின்றனர்.

இங்கு நாம் கைத்தொழில் பேட்டைகளை நிறுவுவதன் மூலம் பல வேலை வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்ள முடியும்.

இந்தத் தேர்தல் காலத்தில் தமிழ் மக்கள் தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டும்.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்டத் தமிழரசுக் கட்சி வேட்பாளர் வைத்தியர் இ.சிறிநாத் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது,

வெளிநாடுகளில் அரசை நம்பிப் பொருளாதார நடவடிக் கைகள் இருப்பதில்லை. எம்மிடமுள்ள வளங்களைப் பயன் படுத்தும் போதே எமது மக்களுக்கான உரிய தேவைகளை நிறைவேற்றச் சந்தர்ப்பம் உருவாகும்.



இந்த நிலையில் உரிய திட்டங்களை நாம் இங்குள்ள புத்திஜீவிகளின் உதவியுடன் முன்னெடுக்கத் தயாராக இருக்கின்றோம்.

எனவே மக்கள் தெளிவான நம்பிக்கையுடன் தமிழரசுக் கட்சி மீதும் தெரிவு செய்யப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதும் வைக்க முடியும். தமிழ்த் தேசியத்தை நேசிக்கும்என்றும் சோரம் போகாத எமது மது வளங்களை பாதுகாக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக நாம் செயற்படுவோம்.

எமது அபிவிருத்திகளை முன்னெடுக்க நாம் என்றுமே தயாராக இருக்கின்றோம். இருப்பினும் கடந்த காலங்களில் காணப்பட்ட ஒரு மாயையுடன் கூடிய ஏமாற்றத்தைத் நாம் தவிர்த்து, எமது மாவட்டத்தில் இருந்து புதிய மாற்றத்தை உருவாக்க வேண்டும். அதற்காக இடம்பெறவுள்ள நாடா ளுமன்றத் தேர்தலில் எமது கட்சி வேட்பாளர்களை ஆதரித்து அதிகப்படியான தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களை நீங்கள் தெரிவு செய்ய வேண்டும்.– என்றார்.

# வடக்கு, கிழக்கில் இளைய சமூகத்தின் எதிர்பார்ப்பு நிறைவேற்றப்பட வேண்டும்

## முன்னாள் எம்.பி. செல்வம் அடைக்கலநாதன்

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

வடக்கு, கிழக்கில் உள்ள இளைஞர், யுவதிகள் மத்தியில் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக ஆர்வம் காணப்படுகிறது. அத்துடன் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழிவகைகளைக் கையாள வேண்டும் என்னும் விடயத்தையும் அவர்கள் எதிர்பார்த்துள்ளனர்.

இவ்வாறு வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணி வடக்கு, கிழக்கில் தேர்தல் பிரச்சாரங்களை முன்னெடுத்து வருகின்றது. இதனூடாக மக்களின் நிலைப்பாட்டையும் தெரிந்து கொண்டுள்ளோம்.

இளைஞர் மத்தியில் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக ஆர்வம் காணப்படுகிறது. மேலும் இனப்பிரச்சினையும் தீர்ப்பதற்கான வழி வகைகளையும் நாங்கள் கையாள வேண்டும் என்கிற விடயத்தையும் எதிர்பார்க்கின்றனர்.



இந்த இரு விடயங்களையும் ஒரே திசையில் கொண்டு செல்ல வேண்டும் என்னும் சூழ்நிலை எமக்கு ஏற்பட்டுள்ளது.

திறமையுள்ளவர்கள் தெரிவு செய்யப்படாமல், அரசியல் ரீதியான செயற்பாடுகளில் தங்களுடன் நிற்பவர்களுக்குச் சில அமைச்சர்களைக் கொண்ட கட்சிகள் வேலை வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுத்துள்ளனர்.

இந்த விடயத்தில் இளைஞர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போது ஊழல் அற்ற அரசு எனக் கூறப்படுகின்ற தற்போதைய ஜனாதிபதியின் கூற்று எல்லாம் அனைத்து அபிவிருத்தி ரீதியான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்று இளைஞர்கள் கூறுகிறார்கள்.

எங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்திலும் நாங்கள் அபிவிருத்தியோடும், இனப் பிரச்சினைக்கான தீர்வுக்கான வழி வகைகள் குறித்தும் நாங்கள் சொல்லியாக வேண்டும் என்கின்ற நிலை இருக்கின்றது.

இளைஞர்களின் கோரிக்கைகளை நான் ஏற்றுக் கொள்கிறேன். யாழ்ப்பாணத்தில் ஒரு ஆசனம் குறைக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புகளை தேடிச் சென்றவர்களின் தொகை அதிகரித் துள்ளதான் காரணமாகவே ஆசனம் இங்கு குறைக்கப்பட்டுள்ளது.

பொதுவாகப் பார்க்கின்ற போது இளைஞர்களின் ஆர்வம் உள்நாட்டில் வேலை வாய்ப்புக்கள், தொழிற் சாலைகள் அமைத்தல் உள்ளிட்ட பொருளாதார ரீதியாக அவர்களின் சிந்தனைகள் செயல்பட ஆரம்பித் துள்ளது.

எனவே இளைஞர், யுவதிகளின் சிந்தனைகளை ஒரு பெறுமதியாக ஏற்று நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.– என்றார்.





# மத்திய மாகாண திணைக்களங்களுக்கு புதிய தலைவர்கள் நியமிக்கப்பட்டனர்

(தலவாக்கலை பி.கேதீஸ்)

மத்திய மாகாணத்திலுள்ள திணைக்களங்களுக்கு புதிய தலைவர்களை நியமிக்க மத்திய மாகாண ஆளுநர் எஸ். பி. எஸ். அபயகோன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதன்படி, மத்திய மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவின் தலைவராக காமினி ராஜகருணா, மத்திய மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபையின் தலைவராக பி. எஸ். கே. லங்கேஸ்வரகே, மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவராக பி. பி. ஏ. என். சந்திரசிறி மற்றும் மத்திய மாகாண நூலக சேவை சபையின் தலைவராக எம்.அம்கஹவத்த ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்களை மத்திய மாகாண ஆளுநர் எஸ். பி. எஸ். அபயகோன் மத்திய மாகாண ஆளுநர் அலுவலகத்தில் வைத்து வழங்கிவைத்தார்.





# புத்தளம் கொட்டுக்கட்சி பகுதியில் துப்பாக்கிகளுடன் ஒருவர் கைது!

(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)

புத்தளம் கொட்டுக்கச்சி கல்குளம் பிரதேசத்தில் உள்ள வீடொன்றை நேற்று புதன்கிழமை (23) பிற்பகல் முற்றுகையிட்டு தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டபோது இரண்டு துப் பாக்கிகளுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்

அனுமதிப்பத்திரம் இன்றி சட்ட விரோதமாக துப்பாக்கிகளை வைத் துள்ளார் என்று பொலிஸ் விசேட அதிர டிப்படைக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய குறித்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது, வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்றும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேக் நபர் மீட்கப்பட்ட துப்பாக்கிகளுடன் புத்தளம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கபிபட்டுள்ளார் என்று பொலிஸ் விஷேட அதிரடிப்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.



# தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதறடிக்க கண்டியில் நடக்கும் அரசியல் சூழ்ச்சிகள்

## ஐக்கிய மக்கள் கூட்டணியின் வேட்பாளர் பாரத் அருள்சாமி

(க.கிஷாந்தன்)

நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் என்பது, அரசியல் வாதிகளுக்கு மக்களால் வழங்கப்படும் உயர் பதவியாகும். அது தனிநபருக்கு உரிய சொத்தோ அல்லது குடும்பத்துக்கு உரிய சொத்தே கிடையாது. எனவே, அந்த உயரிய பதவியை இந்த முறை எனக்கு வழங்குவதற்குக் கண்டி மாவட்ட மக்கள் தீர்மானித்துள்ளனர்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் கூட்டணியின் கண்டி மாவட்ட வேட்பாளர் பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

பொதுத் தேர்தலுக்கான தேர்தல் பிரசாரத்தை சர்வமத வழிபாடுகளுடன் பாரத் அருள்சாமி இன்று (24) ஆரம்பித்தார்.

அதில் முதலாவதாக கண்டி கட்டுக்கலை ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயத்துக்குச் சென்று விசேட பூஜை வழிபாடுகளில் ஈடுப்பட்டார்.

இவருடன், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கண்டி மாவட்ட அமைப்பாளர் விஷ்வா, செயற்குழு உறுப்பினர்களான குலேந்திரன், கலாதாரன், உமா மகேஸ்வரி, கிருஷ்ணா விஜேந்திரன், சேகர் என பலரும் கலந்துக் கொண்டனர்.

வழிபாடுகளின் பின் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அவர் தெரிவித்தவை வருமாறு,

தமிழ் முற்போக்கு கூட்டணியின் சார்பில், ஐக்கிய மக்கள் சக்தியின் தொலைபேசி சின்னத்தின்கீழ் பொதுத்தேர்தலில் இந்த முறை கண்டி மாவட்டத்தில் போட்டியிடுகின்றேன். அதற்கான பிரசாரத்தை இன்று இறையாசியுடன் வெற்றிகரமாக ஆரம்பித்துள்ளேன்.

கண்டி மாவட்டத்தில் தமிழ்ப் நாடாளுமன்ற பிரதிநிதித்துவதற்கு உரிய விதையை 2010 ஆம் ஆண்டு எமது தலைவர் மனோ கணேசன் விதைத்தார். அந்த விதை மூலம் 2015 இல் அறுவடை கிடைத்தது. ஆனால் இன்று தமிழ்ப் பிரதிநிதித்துவம் சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

எனவேதான் கண்டி மாவட்டத்துக்கு உரிய தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை பாதுகாக்க தலைவர் மனோ கணேசனின் நேரடி வழிகாட்டலுடன் தேர்தலில் போட்டியிடுகின்றேன். நிச்சயம் மக்கள் ஆணை கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.

தமிழ் மக்களின் வாக்குகளை சிதறடிப்பதற்கு உரிய கண்டியில் அரசியல் சூழ்ச்சிகள் நடக்கின்றன. அந்த சூழ்ச்சிகளை எல்லாம் முறியடித்து நிச்சயம் நாம் வெற்றிபெறுவோம்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படும் என்று ஜனாதிபதி உறுதியளித்துள்ளார். இது நல்ல விடயம்.





அவ்வாறு நடந்தால் நாடாளுமன்ற ஆட்சி முறைமை உருவாக்கப்படும். முழு அதிகாரமும் நாடாளுமன்றம் வசம் இருக்கும். எனவே, எமது கண்டி மண்ணுக்குத் தமிழ்ப் பிரதிநிதித்துவம் காலத்தின் கட்டாயமாக அமையும். தமிழ் மக்களின் ஏகோபித்த பிரதிநிதியாக மக்கள் என்னை நாடாளுமன்றம் அனுப்பி வைப்பார்கள்.

நாடாளுமன்ற பிரதிநிதித்துவமென்பது மக்கள் எமக்கு வழங்கும் பதவி. அது தனிநபருக்கு உரிய சொத்து அல்ல. அந்த பதவியை இந்த முறை எனக்கு வழங்குவதற்கு கண்டி மாவட்ட மக்கள் தீர்மானித்துவிட்டனர். தமிழ் மக்களின் பிரதிநிதியாக மட்டுமல்ல கண்டியில் வாழும் அனைத்து மக்களதும் குரலாக நான் ஒலிப்பேன்.

இலங்கை ஜனநாயக நாடு. எவரும் தேர்தலில் போட்டியிடலாம். அது அவர்களின் உரிமை. ஆனால் சிலர் சுயநல அரசியலுக்காக போட்டியிடுகின்றனர். மேலும் சிலர் வாக்குகளை சிதறடிப்பதற்காக போட்டியிடுகின்றனர். எனவே, மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும். ஐக்கிய மக்கள் கூட்டணியின் தமிழ் வேட்பாளரான என்னை வெற்றிபெறவைப்பதில் மக்கள் உறுதியாக உள்ளனர்.- என்றார்.




# ஐக்கிய நாடுகள் தினம் இன்றாகும்!

## (ஒக்ரோபர் 24)

■ ஆர். நடராஜன் ஹரன்

உலகம் மூன்றாவது உலக யுத்தத்தை நோக்கி இன்று சென்று கொண்டிருக்கின்றது. இதற்கு அடித்தளம் இட்டுச்செல்லும் வகையில் இஸ்ரேல் போர் உக்கிர மடைந்து வருவதும் உலகநாடுகள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தி வருகின்ற இன்றைய நாளில் நாம் இதனை தடுக்க எடுக்கப்படும் வழிமுறைகள் தொடர்பாக ஆராய வேண்டி இருக்கின்றது.

ஐக்கிய நாடுகள் என்ற வார்த்தை, முதல் உலகப் போரின் போது, அந்த நேரத்தில் ஜனாதிபதி பிராங்க்ளின் டி. ரூஸ்வெல்ட் பரிந்துரைத்த 1 ஜனவரி 1942 இல் பயன்படுத்தப்பட்டது.

03 ஆண்டுகளுக்குப் பிறகு, 24 ஒக்ரோபர் 1945 அன்று அமைப்பு நடைமுறைக்கு வந்தது. நிறுவப்பட்ட நேரத்தில், ஐ.நாவில் 51 உறுப்பினர்கள் இருந்தனர். அது இப்போது 193 ஆக உள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தரமற்ற உறுப்பினர் ஆசனத்தை 2021 ஜனவரி முதல் இரண்டு வருட காலத்துக்கு இந்தியா எடுக்கவுள்ள நிலையில், இந்தியா எப்போதும் அமைதி, பாதுகாப்பு மற்றும் செழிப்புக்கு ஆதரவாக பேசும். இந்தியா, முழு மனிதகுலத்தின் நலன்களைப் பற்றி எப்போதும் சிந்தித்து வருகிறது. ஒருபோதும் சொந்த நலன்களைப் பற்றி அல்ல. இந்த தத்துவம், எப்போதும் இந்தியாவின் கொள்கைகளின் உந்து சக்தியாக இருந்து வருகிறது. 'நாங்கள் எப்போதும் மனித குலத்தின் நலன்களுக்காக உழைத்திருக்கிறோம். எங்கள் சொந்த நலன்களுக்காக அல்ல.' இந்தியாவின் கூட்டாண்மை எப்போதும் இந்த கொள்கையால் வழிநடத்தப்படுகிறது.

கடந்த இரண்டு வருடங்களாக , உலகம் முழுவதும் கொரோனா வைரஸின் தொற்றுநோயை எதிர்த்துப் போராடி வருகிறது. தொற்றுநோய்க்கு எதிரான இந்த கூட்டுப் போராட்டத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் பங்களிப்பு எவ்வாறு இருந்தது? இந்தப் போராட்டத்தில் உலக நாடுகளுக்குள் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும் வகையில் ஐ.நா. செயல்படாதது ஏன்?.

இதன் விளைவாக பல்வேறு பெயரின கொண்ட தடுப்பு மருந்துகள் பரிசோதனைகள் மூலம் முதலாம் சொட்டு முதல மூன்றாம் சொட்டுவரை சென்று இன்று அதற்கும் மேலாக விசேட சொட்டு என்றும் வழங்கப்பட்டு வருகின்றது.

கொரோனாவை எதிர்கொள்ள உலகளாவிய ஒற்றுமை தேவை. கொரோனாவுக்கு மருந்து கண்டு பிடிப்பதில், இந்தியா மூன்றாம் கட்டத்தில் உள்ளது. உலகில், அதிக அளவில் தடுப்பூசி உற்பத்தி செய்யும் நாடு என்ற வகையில், உலகளாவிய சமூகத்துக்கு ஒரு உறுதிமொழியை வழங்க விரும்புகிறேன் என இந்திய பிரதமர் தெரிவித்திருந்தார்

"இந்தியாவின் கொரோனா தடுப்பூசியின் மூன்றாம் கட்ட பரிசோதனைகள் நடந்து வருகின்றன. 3 ஆம் கட்ட மருத்துவ பரிசோதனைகளுடன் முன்னேறி வருகிறோம். உலக மக்கள் அனைவருக்கும் தடுப்பூசி கிடைக்கும் வகையில், அதை சேமித்து வைப்பதற்கான வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்கும் இந்தியா உறுதி கொண்டுள்ளது. நாங்கள் வலுவாக இருந்தபோது, நாங்கள் ஒருபோதும் உலகுக்கு அச்சுறுத்தலாக இருக்கவில்லை, நாங்கள் பலவீனமாக இருந்தபோது, நாங்கள் ஒருபோதும் உலகத்துக்கு ஒரு சுமையாக மாறவில்லை" என்று பேசி முடித்தார்.

உலக நாடுகளை கண்காணிக்கும் ஐ.நா. கடுமையான நிதி நெருக்கடியை சந்தித்து வருகிறது. மாத சம்பளம் கூட வழங்க முடியாத இந்த நிலைக்கு அமெரிக்கா காரணமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

உலக நாடுகளுக்கு ஒரு பிரச்சினை என்றால் ஐக்கிய நாடுகள் சபையை நாடுவார்கள். அந்த ஐ.நாவுக்கு நீதி நெருக்கடி என்றால் எங்கே போவது என்ற நிலைக்கு ஐ.நா. மன்றம் தள்ளப்பட்டுள்ளது. உலக நாடுகளுக்கு இடையே ஏற்படும் பிரச்சினைகள், போர்களை தீர்க்கவும், மனித நேய பணிகளை மேற்கொள்ள, மத்தியஸ்தம் செய்ய உருவாக்கப்பட்ட பொதுவான அமைப்புதான் ஐக்கிய நாடுகள் சபை. 1945 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஐ.நா. அதன் பல்வேறு பணிகளை உறுப்பு நாடுகள் வழங்கும் நிதி பங்களிப்பில் இயங்குகிறது.

சமீப காலமாக உறுப்பு நாடுகள் தாங்கள் செலுத்த வேண்டிய நிதியை முறையாக செலுத்தாததால் கடுமையான நிதி நெருக்கடியை ஐ.நா. சந்தித்து வருகிறது. இதன் விளைவாக ஐ.நாவில் பணியாற்றும் 37 ஆயிரம் ஊழியர்களுக்கு மாத சம்பளம் வழங்க முடியாத நிலைக்கு ஐ.நா. தள்ளப்பட்டு இருக்கிறது. ஐ.நாவில் உறுப்பு நாடுகளாக உள்ள 193 நாடுகளில் 64 நாடுகள் பாக்கி வைத்துள்ளன. இதில் குறிப்பாக அமெரிக்கா, ஈரான், பிரேசில், அர்ஜெண்டினா, மெக்ஸிகோ ஆகிய நாடுகள் அதிகளவில் பாக்கி வைத்துள்ளன.

இது குறித்து அறிக்கை வெளியிட்ட ஐ.நாவின் பொதுச்செயலாளர் ஆண்டானியோ கட்டர்ஸ் முறையாக நிதி செலுத்தும் 129 நாடுகளுக்கு நன்றியையும், பாக்கி வைத்துள்ள நாடுகள் நிலைமையை உணர்ந்து உடனடியாக தங்கள் பங்களிப்பை வழங்குமாறு தெரிவித்துள்ளார். தற்போது ஐ.நாவின் பற்றாக்குறை இந்திய மதிப்பில் ஆயிரத்து 634 கோடியாக உள்ளது. இது இந்த மாத இறுதியில் 4 ஆயிரத்து 263 கோடியாக உயரும் என்று கணிக்கப்பட்டுள்ளது. உலகின் ஏகாதிபத்திய நாடான அமெரிக்காதான் ஐ.நாவுக்குப் பெருமளவில் நிதியை வழங்கி வருகிறது.

ஐ.நாவின் வருடாந்திர பட்ஜெட்டில் 22 சதவீதம் அமெரிக்கா வழங்குகிறது. அமெரிக்க அதிபராக ட்ரம்ப் பொறுப்பேற்ற பின் செலவினங்களை குறைக்கும் நடவடிக்கையாக ஐ.நாவுக்கு வழங்கும் தொகையை அமெரிக்கா வெகுவாக குறைத்துள்ளதாகச் சொல்லப்ப

தொடர்ச்சி ▼

# ஐக்கிய நாடுகள் தினம் இன்றாகும்!

தொடர்ச்சி▲

டுகிறது. மேலும் போரால் பாதிக்கப்பட்டுள்ள நாடான சிரியாவே நிதி பங்களிப்பு முறையாக வழங்கி உள்ள போதும் அமெரிக்கா, சவுதி அரேபியா உள்ளிட்ட பணக்கார நாடுகள் நிதி பங்களிப்பை வழங்குவதில்லை.

இந்த நிதி நெருக்கடி காரணமாக ஐ.நா. மன்றத்தில் வளாகத்தில் நகரும் படிக்கட்டுக்கள் பயன்பாடு நிறுத்தி வைப்பு, குடி தண்ணீர் தட்டுபாடு, புதிய ஆள்களை பணியமர்த்துவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமை என்று செய்திகள் வெளியாகின்றன. உலகநாடுகளின் அமைதிக்காவும் நல்வாழ்வுக்காக பணியாற்றும் ஐ.நாவின் நிலையறிந்த உறுப்பு நாடுகள் செயல்பட வேண்டும் என்ற கோரிக்கை மேலோங்கி உள்ளது.

எனினும் இவற்றின் தடைகளை தாண்டி வட கொரியா தொடர்ந்தும் தனது நிலைப்பாட்டை மாற்றாது அணு ஆயுதத்தையும் விடச் செறிவான ஐதரசன் குண்டை உற்பத்தி செய்துள்ளது என்று ஊடகங்களின் மூலமாக அறியமுடிந்துள்ளமை கவலை தரும் விடயமே.

ஐ.நா. அமைப்புக்கு முன்னதாக இதுபோன்ற பல சர்வதேச அமைப்புகள் உருவாகியிருந்தன. அவற்றுள் முக்கியமானது முதல் உலகப் போருக்குப் பின் 1919 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சங்கம் ஆகும். இந்த அமைப்பும் உலக சமாதானத்தை பேணுதல் என்ற பிரதான நோக்கத்தை கொண்டிருந்தது. இருப்பினும் அதனால் தனது செயல்பாட்டை வெற்றிகரமாக கொண்டு செல்ல முடியவில்லை. ஏனெனில் இதில் அனைத்து நாடுகளும் அங்கம் வகிக்கவில்லை.

இதில் ஏற்பட்ட தோல்வியே 2 ஆம் உலகப் போருக்குக் காரணமாக அமைந்தது. 2 ஆம் உலகப் போரில் ஏற்பட்ட அழிவு காரணமாக அந்தப் போரை நிறுத்தும் நோக்கத்துடன் சில உலக தலைவர்கள் ஒன்று கூடிச் சமாதானத்தை நிலை நாட்டவும், எதிர்காலத்தில் இத்தகைய யுத்தங்கள் ஏற்படுவதை தடுக்க வேண்டும் என்ற நோக்கத்துடனும் உருவாக்கிய அமைப்பே ஐ.நா. சபை ஆகும். ஐக்கிய நாடுகள் என்பதைத்தான் சுருக்கமாக ஐ.நா. என்கிறோம். ஐ.நா.வின் நோக்கங்களையும், சாதனைகளையும் உலகெங்கும் எடுத்துக் கூறுவது இந்த தினத்தின் முக்கிய நோக்கமாகும். ஐ.நாவில் உலகின் அனைத்து நாடுகளுமே அதாவது 193 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

ஐ.நா. சபை சிறுவர்களைப் பராமரிக்கும் யுனிசெப் நிறுவனம், அகதிகளை பராமரிக்கும் நிறுவனம், மேம்பாட்டு திட்டங்களுக்கான நிறுவனம், மக்கள் தொகை நிதியம் போன்ற சர்வதேச உதவி வழங்கும் பல அமைப்புகளை உருவாக்கியுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் உலக நாடுகளில் கடைபிடிக்கப்படும் உலக மக்கள் தொகை தினம், உலக சுற்றுச் சூழல் தினம் போன்ற சர்வதேச தினங்களை அறிவிப்பதும் இதன் பணிகளில் ஒன்றாகும். ஆண்டுதோறும் டிசெம்பர் 10 ஆம் திகதி கொண்டாடப்படும் ‘மனித உரிமை தினம்’ தான் ஐ.நா. அறிவித்த முதல் சர்வதேச தினம் ஆகும். ஐக்கிய நாடுகள் சபை 6 முக்கிய அமைப்புகளைக் கொண்டது. இதில் சர்வதேச நீதிமன்றம் தவிர மற்ற 5 அமைப்புகளும் நியூயார்க்கிலுள்ள ஐ.நா.தலைமையகத்திலிருந்தே இயங்கி வருகிறது.

1. ஐ.நா. பொதுச்சபை: இது ஐக்கிய நாடுகளின் முக்கியமானதொரு அங்கமாகும். இதில் எல்லா நாடுகளுக்கும் சம உரிமை அளிக்கப்படும். ஐக்கிய நாடுகளின் வரவு செலவுகளைக் கண்காணிப்பதும், நிரந்தரம் அல்லாத உறுப்பினர்களை பாதுகாப்பு சபைக்கு தேர்ந்தெடுப்பதும், பொதுச்சபையின் தீர்மானங்களை பரிந்துரைப்பதும் இந்தச் சபையின் முக்கிய கடமைகளாகும்.

2. ஐ.நா. பாதுகாப்பு மன்றம்: சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை பராமரிப்பது இதன் முக்கிய கடமையாகும். ஐ.நா. சாசனத்தில் குறிப்பிட்டுள்ளபடி அமைதி காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், பன்னாட்டு பொருளாதார தடைகளை விதித்தல் மற்றும் ராணுவ நடவடிக்கைகள் எடுத்தல் போன்ற அதிகாரங்கள் இதற்கு வழங்கப்பட்டுள்ளன.

3. ஐ.நா. பொருளாதார மற்றும் சமூக சபை: பொருளாதார மற்றும் சமூக தொடர்பான விஷயங்களை ஒருங்கிணைக்கும் பொறுப்புடைய அமைப்பாகும். உலக பொருளாதார மற்றும் சமூக பிரச்சினைகளை விவாதித்து உறுப்பு நாடுகளுக்கும், ஐ.நா. அமைப்பிலுள்ள ஏஜென்சி நிறுவனங்களுக்கும் ஓர் செயலாக்கத் திட்டத்தை வகுப்பது இதன் முக்கிய நோக்கமாகும்.

4. ஐ.நா. பொறுப்பாட்சி மன்றம்: இது ஐக்கிய நாடுகளின் பொறுப்பில் விடப்பட்ட நாடுகள் மற்றும் பகுதிகளை நிர்வகிக்க ஏற்படுத்தப்பட்ட ஒரு அமைப்பாகும். பெரும்பாலான நாடுகள் 2 ஆம் உலகப் போருக்குப் பின்னர் தோற்கடிக்கப்பட்ட நாடுகளாகும். இவற்றில் சில நாடுகள் விடுதலை பெற்றுள்ளன. சில நாடுகள் தன்னாட்சி அடைந்து விட்டன. சில நாடுகள் அண்டை நாடுகளுடன் இணைந்து கொண்டன.

5. ஐ.நா. செயலகம்: ஐக்கிய நாடுகளின் பல்வேறு அமைப்புகளின் கூட்டங்களுக்கு வேண்டிய ஆய்வுகள், தகவல்கள் மற்றும் வசதிகளை ஒருங்கிணைத்துத் தருகிறது. மேலும் ஐ.நா. நிறுவனத்தின் பிற அமைப்புகள் இடுகின்ற பணிகளையும் நிறைவேற்றுகிறது. இதன் ஊழியர்கள் செயல்திறன் மற்றும் நேர்மையின் அடிப்படையில் உலக அளவில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று இதன் சாசனம் வலியுறுத்துகிறது.

6. சர்வதேச நீதிமன்றம்: ஐக்கிய நாடுகள் சபையின் நீதித்துறை சார்ந்த முதன்மையான அமைப்பாகும். இது நெதர்லாந்து நாட்டின் தலைநகரான தி ஹேக்கில் உள்ளது. உறுப்பு நாடுகளால் முன்வைக்கப்படும் சட்டத் தகராறுகளைத் தீர்த்து வைப்பதும், அனைத்துலக அமைப்புகள் முன்வைக்கும் சட்டம் தொடர்பான கேள்விகள் குறித்து ஆலோசனை வழங்குவதும் இந்த நீதிமன்றத்தின் முக்கிய பணிகளாகும்.

வீட்டோ அதிகாரம் – சீனா, பிரான்ஸ், ஐக்கிய ராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, ரஷ்யா ஆகிய ஐந்து நாடுகள் ஐக்கிய நாடுகள் சபையில் வீட்டோ அதிகாரமுள்ள நாடுகளாகும். மேற்படி நாடுகளில் ஒரு நாடாயினும் தாம் விரும்பாத தீர்மானத்தை ஐ. நா. சபை எடுக்கின்ற போது அத்தீர்மானத்தைத் தடுத்து நிறுத்துகின்ற அதிகாரம் இந்த நாடுகளுக்கு உண்டு. இதனாலேயே ஐ. நா. இயங்குகின்ற செலவில் அரைப்பங்கை இவ் ஐந்து நாடுகளுமே ஏற்றுக்கொள்கின்றன.

ஐ.நா.சபைக்கு வருமானம் என்பது அதன் உறுப்பு நாடுகள் செலுத்தும் தொகைதான். அனைத்து உறுப்பு நாடுகளும் தமக்கு விதிக்கப்பட்ட தொகையைச் செலுத்த வேண்டும். செலுத்த வேண்டிய தொகையின் அளவு அந்த நாட்டின் பொருளாதார பின்னணி, தேசிய வருமானம், மக்கள் தொகை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. ஐ.நாவின் ஆண்டு வருமானத்தில் ஐக்கிய அமெரிக்கா 22 வீதமும், ஜப்பான் 19.6 வீதமும், ஜேர்மனி 9.8 வீதமும், பிரான்சு 6.5 வீதமும் தொகையைச் செலுத்துகின்றன.

உலகத்தின் சமாதானத்துக்காகவும், மனித உரிமைகளுக்காகவும் ஐக்கிய நாடுகள் சபை ஆற்றும் அளப்பரிய சேவையை யாராலும் மறக்க முடியாது. எனினும் ஐ.நா. சபையின் பல முடிவுகள் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் போன்ற வல்லரசு நாடுகளின் விருப்பத்துக்கு உட்பட்டவையாக இருக்கிறதே தவிர அப்பாவி மக்களை பாதுகாப்பதாகவோ, சிறிய நாடுகளின் இறையாண்மைக்கு உத்திரவாதம் அளிப்பதாகவோ இல்லை என்ற குற்றச்சாட்டும் இருந்து வருகிறது. எல்லா நாடுகளின் மக்களையும் சமமாகப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஐ.நா. சபைக்கு உண்டு என்பது அனைத்து நாட்டு மக்களின் கோரிக்கையாகும்.





## டானா புயல் எதிரொலி:

# கொல்கத்தா விமான நிலையம் மூடப்பட்டது, ரயில்கள் இரத்து!

வடக்கு அந்தமான் கடற்பகுதியில் நிலவிய வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக, மத்திய கிழக்கு வங்காள விரிகுடா மற்றும் அதனை அண்மித்த வடக்கு அந்தமான் கடற்பகுதிகளில் காற்றழுத்த தாழ்வு பகுதி உருவானது.


இந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி மேற்கு - வடமேற்கு திசையில் நகர்ந்து, மத்திய கிழக்கு வங்காள விரிகுடா பகுதிகளில், காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றுள்ளது.

தொடர்ந்து காற்றழுத்த தாழ்வு மண்டலம் வலுவாகி டானா புயலாக உருவெடுத்துள்ளது.

டானா புயல் இன்று வடமேற்கு வங்காள விரிகுடாவில் தீவிர புயலாக வலுப்பெறும் என இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இதனால் முன்னெச்சரிக்கையாகக் கொல்கத்தா விமான நிலையம், இன்று இரவு 8 மணி முதல் 15 மணி நேரத்திற்கு மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கொல்கத்தாவின் கிழக்கு கடலோர வழித்தடத்தில் இயங்கும் 197 ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.



# பேச்சுவார்த்தையினை ஆதரிக்கின்றோம் பிரிக்ஸ் மாநாட்டில் மோடி திட்டவட்டம்

"பேச்சுவார்த்தையையும் இராஜ தந்திரத்தையும் இந்தியா ஆதரிக்கும், போரை ஆதரிக்காது."

– இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் திட்டவட்டமாக தெரிவித்தார்.

பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகள் அடங்கிய 'பிரிக்ஸ்' அமைப்பின் 16 ஆவது உச்சி மாநாடு ரஷ்யாவின் கசான் நகரில் நேற்று முன்தினம் தொடங்கியது. இதில் பங்கேற்பதற்காக பிரதமர் நரேந்திர மோடி நேற்று முன்தினம் ரஷ்யாவின் கசான் நகருக்கு சென்றார்.

இந்நிலையில் பிரிக்ஸ் மாநாட்டில் நேற்று பிரதமர் மோடி உரையாற்றுகையில்,

"உலக நாடுகள் பல்வேறு சவால்களை எதிர்கொண்டுள்ள நிலையில் இம்மாநாடு நடைபெறுகிறது. வடக்கு–தெற்கு மற்றும் கிழக்கு–மேற்கு பிரிவினைகள் குறித்து உலக நாடுகள் விவாதித்து வருகின்றன. ஆனால் பணவீக்கத்தை கட்டுப்படுத்துவது, உணவு, எரிசக்தி, சுகாதாரம் மற்றும் குடிநீர் ஆகிய வசதிகளை உறுதி செய்வதற்குத்தான் நாம் இப்போது முன்னுரிமை அளிக்க வேண்டும்.

பிரிக்ஸ் அமைப்பு பிரிவினையை ஏற்படுத்தவில்லை என்பதை உலகத்துக்கு நாம் எடுத்துரைக்க வேண்டும். ராஜ தந்திரத்தையும் பேச்சுவார்த்தையையும் நாங்கள் ஆதரிக்கிறோம், போரை ஆதரிக்கவில்லை என்பதையும் எடுத்துச் சொல்ல வேண்டும். கரோனா பெருந்தொற்றில் இருந்து விடுபட பிரிக்ஸ் அமைப்பு எவ்வாறு இணைந்து செயல்பட்டதோ அதுபோல பாதுகாப்பான, வலிமையான மற்றும் வளமான எதிர்காலத்தை நாம் உருவாக்குவதற்கும் இணைந்து செயல்பட வேண்டும்.

ஐ.நா.பாதுகாப்பு கவுன்சில், சர்வதேச வளர்ச்சி வங்கிகள், உலக வரத்தக அமைப்பு உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளில் இப்போதைய சூழலுக்கு ஏற்ப சீர்திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். பிரிக்ஸ் மாநாட்டுக்கு ஏற்பாடு செய்தமைக்கும் இந்த அமைப்புக்கு தலைமை வகிப்பதற்கும் ரஷ்ய ஜனாதிபதி புடினுக்கு நன்றி. "– என்றார்.





# துருக்கி விமான நிறுவன தலைமையகத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் 5 பேர் உயிரிழப்பு

## 22 பேர் காயம்



துருக்கி தலைநகர் அங்காராவிற்கு அருகிலுள்ள விமான நிறுவனமொன்றின் தலைமையகத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் 5 பேர் உயிரிழந்தனர்.

அத்துடன், 22 பேர் காயமடைந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குர்திஷ் கிளர்ச்சிக் குழுவான பி.கே.கே.வினால் இந்த தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

எனினும் இந்த தாக்குதலுக்கு எந்த அமைப்பும் இதுவரையில் பொறுப்பேற்கவில்லை.

அதேநேரம் வடக்கு ஈராக் மற்றும் வடக்கு சிரியாவில் உள்ள குர்திஷ் கிளர்ச்சியாளர்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தியதாகத் துருக்கியின் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

துருக்கி, அமெரிக்கா மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகளில் பி.கே.கே. குழுவை ஒரு பயங்கரவாத அமைப்பாக அறிவித்து தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# பெய்ரூட்டில் புறநகரில் இஸ்ரேலின் 17 ஆளில்லா விமானத் தாக்குதல்

பெய்ரூட்டின் புறநகர்ப் பகுதியில் இஸ்ரேல் 17 ஆளில்லா விமானத் தாக்குதல்களை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மேற்படி தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதுடன், பலர் காயமடைந்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

இதன்போது, பெய்ரூட்டின் புறநகர்ப் பகுதியிலுள்ள ஆறு கட்டடங்கள் முழுமையாக சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பக்கங்கள் 03

# கனடா முரசு

வியாழக்கிழமை 24/10/2024

## ஏர் இந்தியா விமானங்களில் பயணம் செய்ய வேண்டாம்

### காலிஸ்தான் எச்சரிக்கை

நவம்பர் 1 முதல் 19 ஆம் திகதி வரை ஏர் இந்தியா விமானங்களில் பயணம் செய்ய வேண்டாம் என்று காலிஸ்தான் பயங்கரவாதி குர்பத்வந்த் சிங் பன்னுன் 02





# லிபரல் கட்சியின் தலைவர் பதவிக்கு ஆபத்து இல்லை என்கிறார் ட்ரூடோ

**தனது தலைமைத்துவத்துக்கு எவ்வித ஆபத்தும் கிடையாது என கனடிய பிரதமரும் லிபரல் கட்சியின் தலைவருமான ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.**

**நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அனைத்து அமைச்சர்களும் பிரதமருக்கு ஆதரவு வழங்குவதாக தனித்தனியாக தங்களது நிலைப்பாட்டை வெளியிட்டு இருந்தனர்.**

வழமையான அமைச்சரவை கூட்டத்தின் நேரத்தில் இரண்டு மடங்கு நேரம் செலவிடப்பட்டு கூட்டம் நடத்தப்பட்டுள்ளது.

கட்சிக்குள் சில தரப்பினர் பிரதமர் பதவி விலக வேண்டும் என கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

தமக்கு பெரும்பான்மையான ஆதரவு காணப்படுவதாகவும் தமது தலைமை பதவிக்கு விது அச்சுறுத்தல்களும் கிடையாது எனவும் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

# கனடாவில் ஈ -ஸ்கூடிகளுக்கு தடை விதிக்குமாறு கோரிக்கை



எதிர்வரும் குளிர்காலத்தில் ஈ-ஸ்கூடிகள் மற்றும் ஈ-பைக்குகள் என்பனவற்றுக்கு தடை விதிக்க வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

கனடாவில் குளிர்கால மாதங்களில் லித்தியம் பேட்டரிகளை பயன்படுத்தி பயணம் செய்யும் ஈ-ஸ்கூடிகள் மற்றும் ஈ-பைக்குகளை தடை செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.

கனடிய போக்குவரத்து சேவை பணியாளர்கள் இந்த பரிந்துரையை விடுத்துள்ளனர்.

இந்த ஈஸ்கூட்டர்கள் மற்றும் ஈ-பைக்குகள் என்பனவற்றில் தீப்பற்றி எரியக்கூடிய அபாயம் காணப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர்கள் மற்றும் பணியாளர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த புதிய நடைமுறை அமலுக்கு வந்தால் கனடிய போக்குவரத்து சேவைக்கு சொந்தமான இடங்களில் பைக்குகள் மற்றும் ஸ்கூட்டர்களை கொண்டு செல்வதற்கு சார்ஜ் செய்வதற்கோ அல்லது பயன்படுத்துவதற்கோ தடை விதிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

நவம்பர் மாதம் 15 திகதி குளிர் காலம் ஆரம்பமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.





## ஏர் இந்தியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எச்சரிக்கை விடுத்துள்ளார் என இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்த நாள்களில் ஏர் இந்தியா விமானம் ஒன்றின்மீது தாக்குதல் தொடுக்கப்படும் என்றும் அவர் உறுதியாகக் கூறியுள்ளார்.

40 ஆண்டுகளுக்குமுன் இதே காலகட்டத்தில்தான் சீக்கிய இனப் படுகொலை நிகழ்ந்தது. 'நீதிக்கான சீக்கியர்கள்' (எஸ்.எப்.ஜே) அமைப்பின் நிறுவனரான பன்னுன், இந்தியாவில் பயங்கரவாதி என அறிவிக்கப்பட்டவர்.

இவர் கனடா, அமெரிக்கா என இரட்டைக் குடியுரிமை பெற்றவர். அதே வேளை கடந்த ஆண்டும் இதே போன்றதொரு மிரட்டலை பன்னுன் விடுத்திருந்தார்.

2023 நவம்பர் 19 ஆம் தேதி டெல்லி இந்திரா காந்தி அனைத்துலக விமான நிலையம் மூடப்படும் என்றும் அதற்கு வேறு பெயர் சூட்டப்படும் என்றும் கூறிய அவர், அந்நாளில் ஏர் இந்தியா விமானங்களில் பயணம் செய்ய வேண்டாம் என்றும் எச்சரித்திருந்தார்.

அதேபோல, 2023 டிசம்பர் 13 ஆம் திகதி அல்லது அதற்குமுன் இந்திய நாடாளுமன்றத்தின்மீது தாக்குதல் நடத்தப்படும் என்றும் அவர் மிரட்டல் விடுத்திருந்தார்.




மேலும், இவ்வாண்டு குடியரசு நாளன்று பஞ்சாப் மாநில முதல்வர் பகவந்த் மானையும் அம்மாநிலக் பொலிஸ் தலைமை இயக்குநர் கௌரவ் யாதவையும் கொல்லப்போவதாக அவர் மிரட்டல் விடுத்திருந்தார்.

இந்நிலையில் இந்திய உள்துறை அமைச்சு பன்னுன்மீது கீழறுப்பு, பிரிவினைவாதக் குற்றச்சாட்டுகளைச் சுமத்தியுள்ளது. அவரது 'எஸ்.எப்.ஜே' அமைப்பிற்கும் இந்தியாவில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கனடாவிலுள்ள காலிஸ்தான் ஆதரவு அமைப்புகளைக் குறிவைத்து இந்தியா செயல்படுகிறது என்றும் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலையில் இந்தியாவிற்குத் தொடர்புள்ளது என்றும் கனடா குற்றம் சுமத்தியது.

அதனை தொடர்ந்து இந்தியாவிற்கும் கனடாவிற்கும் இடையிலான அரசதந்திர உறவுகள் அதலபாதாளத்திற்குச் சென்றுவரும் நிலையில், பன்னுனின் மிரட்டல் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



# பிரிட்டிஷ் கொலம்பியாவில் சீரற்ற காலநிலை: 3 பேர் பலி

பிரிட்டிஷ் கொலம்பியாவில் சீரற்ற காலநிலை காரணமாக உயிரிழந்தோர் எண்ணிக்கை மூன்றாக அதிகரித்துள்ளது.


மாகாணத்தில் பலத்த மழை, கடும் காற்று மண் சரிவு போன்றவற்றால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் வாங்கூவார் தீவுப் பகுதியில் இரண்டு பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், உயிரிழந்தோர் எண்ணிக்கை மூன்றாக அதிகரித்துள்ளது.

ட்ரக் சாரதி ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். சீரற்ற காலநிலை காரணமாக பதிவான மரணங்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.













# பிள்ளைகளை காப்பாற்றுவதற்காக தன் உயிரை பணயம் வைத்த தந்தை

கனடாவில் தந்தை ஒருவர் தனது பிள்ளைகளை காப்பாற்றுவதற்காக தனது உயிரை பணயம் வைத்து செயல்பட்ட சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

ஸ்ப்ரிங்பீல்ட் பகுதியில் இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது. தீப்பற்றி எரிந்த வீட்டுக்குள் சிக்கியிருந்த இரண்டு குழந்தைகளை அந்த நபர் காப்பாற்றியுள்ளார்.

திரைப்படங்களில் வரும் கதாநாயகர்கள் போன்று எரியும் வீட்டுக்குள் திடீரென புகுந்து தனது இரண்டு பிள்ளைகளையும் பாதுகாப்பாக மீட்டு வெளியே வந்துள்ளார்.

ஒன்றாரியோவின் ஸ்ப்ரிங் ஃபீல் பகுதியைச் சேர்ந்த வென் பைபி என்பவரே இவ்வாறு வீர தீர செயலில் ஈடுபட்டுள்ளார்.

இரண்டரை வயது மற்றும் ஒரு வயது நிரம்பாத இரண்டு குழந்தைகள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

எவ்வாறெனினும் இந்த தீ விபத்து காரணமாக அந்த நபருக்கும் குழந்தைகளுக்கும் தீக்காயங்கள் ஏற்பட்டுள்ளன.



தீ விபத்துக்கான காரணங்கள் எதுவும் கண்டறிய கண்டறியப்படவில்லை.